# 3. வேளாண் கடன்கள் உள்ளிட்ட கூட்டுறவு

## 3.1 வேளாண் கடன்கள் உள்ளிட்ட கூட்டுறவு

*ஊர்ப்புறங்களுக்குச் கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர வேறு*
*எந்தக் கடன் அமைப்பும் பொருத்தமானதாக இராது.*
*கூட்டுறவு முறை தோல்வியுற்றது; எனினும் அது வெற்றி பெற வேண்டும்.*

*– அகில இந்திய ஊர்ப்புறக் கடன்கள்*
*ஆய்வு அறிக்கை*

### 3.1.1. முன்னுரை

கூட்டுறவு இயக்கம், உலக அளவில் சமூக–பொருளாதாரத் தளங்களில் சிறப்புற செயல்பட்டு வறுமையை ஒழிப்பதிலும், வேலைவாய்ப்பினை வழங்குவதிலும், சமுதாய வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் பெரும் பங்கினை ஆற்றி வருகிறது. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும், பல்வேறு துறைகளில் கூட்டுறவுத் துறை பெரும் இயக்கமாக உருப்பெற்று பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் உறுதுணை புரிந்து வருகிறது. கூட்டுறவுத் துறையானது வேளாண் கடன், வேளாண் விளைபொருள் விற்பனை, அவசியப் பொருட்கள், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்குதல் முதலானவற்றில் பெரும் பங்காற்றி வருகிறது.

வேளாண் கடன் வழங்குவதில் கூட்டுறவின் பங்கு கடந்த பல ஆண்டுகளாகக் குறைந்து வந்துள்ளது. குறைந்த அளவிலான வணிகம், அதன் தொடர்புடைய கட்டமைப்புச் செலவுகள் அதிகரிப்பதாலும், வணிக வங்கிகளின் போட்டி அதிகரிப்பதாலும் வேளாண் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் செயல்பாடுகள் குறைந்து விட்டன. வணிக வங்கிகளுக்கு உரிய விதிமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களாலும் விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதில் வெற்றியைப் பெறாததாலும், தேவையான நிதி ஆதார வசதிகள் இல்லாமையாலும் கூட்டுறவு வங்கிகள் பல இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்றன. வேளாண் பொருளாதாரத்தின் மந்தமான வளர்ச்சி, தட்பவெப்ப மாறுதல்களால் பாதிப்பிற்கு உள்ளாகும் வேளாண் பொருள் உற்பத்தி ஆகிய காரணங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டினைப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளன.

2006ஆம் ஆண்டில் அரசு மேற்கொண்ட வேளாண் கடன்கள் தள்ளுபடித் திட்டம், நொறுங்கிப்போன ஏழை விவசாயிகளுக்கும், வேளாண் துறைக்கும் புத்துணர்வை ஊட்டியுள்ளது. முற்போக்கு சிந்தனையுள்ள தலைமை, தொழில் முறையிலான நிருவாகம் செய்யும் திறமை, சுதந்திரமான செயல்பாட்டிற்குத் தேவையான, புதுமையான நிருவாக முறைகள், நிறுவன செயல்பாடுகளில் உறுப்பினர்கள் அதிகமாகப் பங்கெடுத்தல் முதலியவை கூட்டுறவுச் சங்கங்களின் மீதான, நம்பிக்கையினை ஏற்படுத்தி, ஊர்ப்புற மக்களைச் சென்று அடைந்திட வழி வகுக்கும்.

### 3.1.2. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டச் சீராய்வு

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உற்பத்திச் செலவுக் குறைப்பு, கூட்டுறவுச் சங்கப் பணிகளை விரிவுபடுத்துதல் போன்ற நோக்கங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. ஊர்ப்புற தொடக்கக் கூட்டுறவுக் கடன் மையங்களை, கடன்களைத் திறம்பட வழங்குவதற்கு ஏதுவாக மாற்றியமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பண்ணை சாராத பணிகளுக்குக் குறிப்பாக, வேலை வாய்ப்பினை உருவாக்குதல், மாற்றுவருமானம் தரக்கூடிய இனங்கள் ஆகியவற்றில் கூட்டுறவு வங்கிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. குறு, சிறு விவசாயிகள், நிலமற்ற, ஆதிதிராவிட, பழங்குடியினர், வறுமையில் வாடும் மக்கள், மகளிர் உள்ளிட்ட ஊர்ப்புற மக்களை மையப்படுத்தி, கூட்டுறவு நிறுவனங்கள் தங்களது திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

#### நிதி செயற்பாடு

பத்தாம் திட்ட காலத்தில் கூட்டுறவுத் துறைக்காக ரூ.190.40 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், செலவிடப்பட்டது ரூ.580.60 கோடியாகும். ஒதுக்கீட்டை விட அதிகமாகச் செலவிடப்பட்டது. அவ்வாறே, பத்தாம் திட்ட காலத்தில் 'வேளாண் நிதி நிறுவனங்கள்' என்கிற தலைப்பின் கீழ் ரூ.35.50 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் ரூ.12.49 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. பத்தாவது திட்ட ஒதுக்கீடு, செலவின விவரம் அட்டவணை 3.1.1இல் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குதல், சிறப்புக்கூறுகள் திட்டம், மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் சாதனை அளவான 100 விழுக்காட்டைவிடக் கூடுதலாகவும், ஆனால் பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் 33.25 விழுக்காடு மட்டும் செலவு செய்யப்பட்டது.

அட்டவணை 3.1. 1

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடும், செலவும்**

(ரூ. கோடியில்)

| துறை / துணைத் துறை | பத்தாவது திட்ட ஒதுக்கீடு | பத்தாவது திட்ட செலவு | திட்ட ஒதுக்கீட்டில் செலவின் விழுக்காடு |
|---|---|---|---|
| **1. கூட்டுறவு நிறுவனங்கள்** | | | |
| கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு நிதி உதவி | 172.41 | 341.28 | 197.95 |
| பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி உதவி | 5.99 | 232.04 | 3873.79 |
| பழங்குடியினர் துணைத் திட்டம் | 12.00 | 3.99 | 33.25 |
| ஆதிதிராவிடர் சிறப்புக் கூறுகள் திட்டம் | | 2.69 | – |
| மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.60 | – |
| **மாநில கூட்டுறவு நிறுவனங்கள்** | **190.40** | **580.60** | **304.94** |
| **2. வேளாண் நிதி நிறுவனங்கள்** | **35.50** | **20.80** | **58.59** |

இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி திட்டத்தின்கீழ் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான, ரூ.34.76 கோடிக்கு மாறாக ரூ.232.04 கோடி செலவிடப்பட்டுள்ளது. வேளாண் கடன்கள் தள்ளுபடியின் விளைவாக, "நபார்டு" வங்கிக்குக் கூட்டுறவு வங்கிகள் செலுத்த வேண்டிய கடன் பற்றுத்தொகை ரூ.1,668 கோடியினை அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் தள்ளுபடியில் ஏற்பட்டுள்ள நட்டத்தினை நேராக்கிடவும், விவசாயிகளுக்குப் புதிய பயிர்க் கடன் அளிப்பதற்காகவும், விவசாயக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் 2006–07இல் ரூ.1,435 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## I. கடன் அமைப்பு

### (அ) குறுகிய காலக் கடன்

அதிக வட்டியைப் பெற்று கடன் அளிக்கும் வட்டி உறிஞ்சிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவைச் சார்ந்த மக்களுக்கு நியாயமான வட்டி வீதத்தில் கடனை வழங்கவும் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ்நாட்டில், குறுகிய காலக்கடன் அமைப்பு மூன்றடுக்குகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மாநில அளவில் 41 கிளைகள், ஒரு தொழில் கூட்டுறவு வங்கி உட்பட 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், மாவட்ட அளவில் 750 கிளைகள், 4474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு அமைப்புகள் ஆகியன 16,317 ஊர்ப்புறங்களில் உள்ள விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன (31.3.05 அன்றைய நிலையில்).

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.7500 கோடி குறுகிய காலக் கடன்களும், ரூ.625 கோடி நடுத்தரக் காலக் கடனும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் கூட்டுறவு வங்கிகள் மேற்குறிப்பிட்ட குறுகிய கால, நடுத்தர காலக் கடன்களாக முறையே ரூ.5043.93 கோடியும், ரூ.291.51 கோடியும் வழங்கின. 2002–03ஆம் ஆண்டுகளிலிருந்து 2004–05ஆம் ஆண்டு வரை நிலவிய வறட்சியால் குறுகிய காலக் கடன் அளிப்பதில் உரிய இலக்கினை எட்ட முடியவில்லை. பல்வேறு கடன் தள்ளுபடித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டாலும் கடன் வழங்குதல், கடன் வசூல் ஆகியவற்றில் போதிய அளவு முன்னேற்றமில்லை.

குறுகிய காலக் கடன் அளிக்கும் நிறுவனங்களின் நிதி நிலைமை 31.3.2006 நிலையின்படி கீழே அட்டவணை 3.1.2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 3.1. 2

### குறுகிய காலக் கடன் நிதிநிலை

(ரூ. கோடியில்)

| வ.எண். | விவரங்கள் | தமிழ்நாடு மாநில வேளாண்மை கூட்டுறவு வங்கி | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி |
|---|---|---|---|---|
| 1 | பங்கு மூலதனம் | 53.48 | 526.50 | 483.16 |
| 2 | மொத்த சொந்த நிதி | 409.62 | 1640.99 | 901.09 |
| 3 | நிலுவைக்கடனும் முன்பணமும் | 3040.70 | 8492.63 | 6376.14 |
| 4 | பெற்ற கடன்கள் | 1206.76 | 2440.84 | 4603.79 |
| 5 | முதலீடுகள் | 1716.36 | 2636.80 | 671.45 |
| 6 | வைப்பு நிதி | 3126.79 | 6998.24 | 2326.93 |
| 7 | வசூல் விழுக்காடு | 93.77 | 69.89 | 70.00 |
| 8 | கடன்–வைப்பு விழுக்காடு | 97.25 | 124.68 | – |

### *(ஆ) நீண்டகாலக் கடன்கள்*

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண், ஊரக வளர்ச்சி வங்கி, மாநில அளவிலும், வட்டம்/ஒன்றிய அளவிலான தொடக்க கூட்டுறவு வேளாண், ஊரக வளர்ச்சி வங்கி ஆகியன நீண்ட கால கடன்கள் அமைப்பில் இரு அடுக்குகளாகும். இவ்வங்கிகள், சங்க உறுப்பினர்களுக்குச் சிறுபாசனம், தோட்டப் பயிர், மலைப்பயிர் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வண்டிகள், டிராக்டர்கள், மின்சார உழவு இயந்திரங்கள், குழாய் பதித்தல், கால்நடை வளர்ப்பு, விவசாயப் பண்ணைகள் அமைத்தல் போன்ற வேளாண் பணிகளுக்கும், அதனைச் சார்ந்த பிற பணிகளுக்கும், கடன் வழங்குகின்றன. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண் – ஊரக வளர்ச்சி வங்கி, தனது கடன் வழங்கும் பணிகளுக்குத் தேவையான நிதியினைச் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுதல் வழியாகத் திரட்டுகிறது. சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் நடுவண் அரசு, மாநில அரசு, நபார்டு வங்கி ஆகியன முதலீடு செய்கின்றன. குறைந்த அளவிலேயே வைப்பு நிதிகளைத் திரட்டியதாலும், குறித்த கடன்கள் வழங்காததாலும், புதிய கடன்களை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டதாலும், வங்கியின் இலாப நிலை, ரொக்கப் பண இருப்பும் பரிமாற்றமும் (Profitability and Liquidity) ஆகியவை பாதிக்கப்பட்டு சுமைகள் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. உயர் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையினை இவ்வங்கி தனது முதலீட்டு தொகையிலிருந்து செலுத்தியதால் முதலீட்டின் அளவு ரூ.73.43 கோடியாக குறைந்தது.

2005–06ஆம் ஆண்டில் நீண்டகால கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் நிதி நிலைமை விவரம் கீழே அட்டவணை 3.1.3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 3.13

**நீண்டகாலக் கடன் நிதிநிலை**

(ரூ. கோடியில்)

| வ.எண். | விவரங்கள் | தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை–ஊரக வளர்ச்சி வங்கி | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை – ஊரக வளர்ச்சி வங்கி |
|---|---|---|---|
| 1 | பங்கு மூலதனம் | 40.39 | 15.78 |
| 2 | வைப்பு நிதி | 48.52 | – |
| 3 | பெற்ற கடன் | 829.20 | 1146.41 |
| 4 | கடனும் முன்பண நிலுவையும் | 1008.53 | 1081.43 |
| 5 | முதலீடுகள் | 73.43 | 64.03 |
| 6 | வசூல் (விழுக்காட்டில்) | 22.50 | – |
| 7 | செயலற்ற சொத்து (நிலுவை கடன் விழுக்காட்டில்) | 86.40 | – |
| 8 | நிகர லாபம் | 15.50 | – |
| 9 | குவிந்த நட்டம் | 115.70 | 574.27 |

நிதி ஆதாரங்களைத் திரட்ட இயலாத நிலை, கடன் வழங்குவதில் முறையற்ற தன்மை, வசூல் செய்வதில் இறங்கு நிலை, கடன் வழங்குவதில் ஏற்படும் அதிக இடர், செலவினம் முதலியவை மிகவும் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

### *(இ) வேளாண் சாராக் கடன்கள்*

வேளாண் சாராத் துறைத் திட்டங்களின் கீழ், சிறு தொழில் நிறுவனங்கள், விசைத்தறிகள், ஊரக வீட்டு வசதி, ஊரக மருத்துவமனை போன்றவற்றிற்கு தொடக்கக் கூட்டுறவு வேளாண்– ஊரக வளர்ச்சி வங்கிகள் கடன் வழங்குகின்றன.

பத்தாவது திட்டகாலத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளினால் வழங்கப்பட்ட குறுகியகால, நடுத்தரகால, நீண்டகாலக் கடன்களின் விவரம் கீழ்க்காணுமாறு:–

## அட்டவணை 3.1. 4

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்**

(ரூ. கோடியில்)

| ஆண்டு | குறுகிய காலக் கடன் | நடுத்தர காலக் கடன் | நீண்ட காலக் கடன் | வேளாண் சாராத் துறைக்கு கடன் |
|---|---|---|---|---|
| பத்தாவது திட்ட இலக்கு | 7500.00 | 625.00 | 1430.00 | 1450.00 |
| 2002–2003 | 963.96 | 94.37 | 218.15 | 301.35 |
| 2003–2004 | 616.59 | 72.15 | 126.88 | 320.10 |
| 2004–2005 | 1080.58 | 43.22 | 12.44 | 242.71 |
| 2005–2006 | 1132.18 | 37.76 | 0.02 | 201.28 |
| 2006–2007 | 1250.00 | 70.00 | 0.00 | 165.56 |
| **பத்தாவது திட்டகால சாதனை** | **5043.93** | **291.51** | **357.49** | **1230.91** |
| **சாதனை விழுக்காடு** | **67.25** | **46.64** | **24.99** | **84.89** |

### (ஈ) வேளாண் (கிசான்) கடன் அட்டைத் திட்டம்

விவசாயிகளின் கடன் தேவைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவதற்காக, நபார்டு வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண் கடன் அட்டை திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், வேளாண் கடன் அட்டை திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றன. இதுவரையில் 15 இலட்சம் வேளாண் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## II. கூட்டுறவு விற்பனை நிலையங்கள்

கூட்டுறவு விற்பனை நிலையங்கள் தங்கள் உறுப்பினர்களின் வேளாண் பொருட்களை விற்பனை செய்வதன் வழியாக உதவியைச் செய்கின்றன. இதனால் விவசாயிகள் நியாயமான வருவாய் பெற வழியேற்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், உரம், வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், 114 தொடக்க விற்பனை சங்கங்கள் ஆகியவற்றின் வழியாக வழங்குகின்றது. இந்த இணையம் 28,410 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 39 கிடங்குகளையும், 369 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 9 வாடகை கிடங்குகளையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சென்னையில் 2 குளிர்பதன நிலையங்களை இயக்கி வருகிறது. இவ்விணையம் தமிழ்நாட்டில் ஆதரவு விலை குறித்த நடைமுறைகளை மேற்கொள்ள இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு முகவராக செயல்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு சங்கங்கள் வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்த விவரம் கீழே அட்டவணை 3.1.5இல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1. 5**

**விற்பனை செய்யப்பட்ட வேளாண் இடுபொருட்கள்**

(ரூ. கோடியில்)

| ஆண்டு | விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் | | | |
|---|---|---|---|---|
| | உரம் | பூச்சிக்கொல்லி மருந்துகள் | விதைகள் | வேளாண் துணைக்கருவிகள் |
| பத்தாவது திட்ட இலக்கு | நிர்ணயிக்கப்படவில்லை | நிர்ணயிக்கப்படவில்லை | நிர்ணயிக்கப்படவில்லை | நிர்ணயிக்கப்படவில்லை |
| பத்தாவது திட்ட சாதனை | 468.49 | 2.16 | 0.63 | 0.17 |

## III. நுகர்வோர் கூட்டுறவு

நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மாநிலத்திலுள்ள தங்கள் கட்டமைப்புகளின் வழியாக, நகர்ப்புற–ஊரக மக்களுக்கு தரம் வாய்ந்த நுகர்வுப் பொருட்களை, நியாய விலையில் வழங்கி வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் கீழ் மாணவர், பணியாளர்கள், மகளிர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட 34 மொத்த விற்பனை பண்டக சாலைகள், 3,255 தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலைகள் உள்ளன. மாநிலத்தில் பொது வழங்கல் திட்டத்தின் அடிப்படை அமைப்பான 21,660

நியாய விலைக் கடைகளை இயக்கி, அதன் வாயிலாக 1.70 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு சேவை செய்து வருகிறது. பத்தாவது திட்டகாலத்தில், மொத்த விற்பனை பண்டக சாலை வழியாக ரூ.3183.58 கோடி மதிப்புள்ள பொதுவழங்கல் திட்டத்தில் அளிக்கப்படுகிற கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருட்களையும், ரூ.1602.14 கோடி மதிப்புள்ள கட்டுப்பாட்டிற்குட்படாத பொருட்களையும் விற்பனை செய்துள்ளது.

### கூட்டுறவுத் துறையில் காணப்படும் சிக்கல்களும், இடர்ப்பாடுகளும்

கடனைத் திரும்பப் பெறுவதில் தேக்க நிலை, தனியார் வணிக வங்கிகளை ஒப்பு நோக்கையில் வட்டி வீதத்தில் உள்ள வேறுபாடுகள், முதன்மை வேளாண் கூட்டுறவு சங்கங்கள் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் செயல்படும் நிலைமை, வங்கிப் பணிகளுக்கான அதிக செலவு, குறிப்பிட்ட பணிகளுக்கே கடன் அளிக்கும் முறை ஆகிய காரணங்களால் கூட்டுறவுத் துறையில் இடர்களும், தடைகளும் எழுகின்றன. பணியாளர்களைச் சரியான வீதத்தில் பணிஅமர்த்துதல், மின் ஆளுகை உள்ளிட்ட புதிய மேலாண்மைத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் ஆகியன காலத்தின் தேவையாகிறது.

போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை, குறைந்த அளவிலான வணிகச் செயல்பாடுகள், வணிகர்களின் போட்டி முதலிய இடர்ப்பாடுகளால் விற்பனை சங்கங்கள் சூழப்பட்டுள்ளன. ஒப்பந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு, உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து போன்ற வேளாண் இடுபொருட்களை வழங்கும் பணிகளில் ஈடுபடும்போது நிதி சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது.

வைத்தியநாதன் குழு அறிக்கையின்படி கூட்டுறவுச் சங்கங்கள், திறனுடன் செயல்பட்டு தன்னாட்சியைப் பின்பற்றுதல், உறுப்பினர்களின் பங்கேற்பை உறுதி செய்தல், நிதி உதவி அளித்தல், நிதி நிருவாகத்தினை சீரமைத்தல், நிறுவன அமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை செய்ய வேண்டியுள்ளது.

**பெட்டி 3.1.1**

**வைத்தியநாதன் குழு பரிந்துரைகள்**

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளின் அமைப்பில் மாறுதல்**

தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் தங்களின் சேவையினை ஊரகக் கடன் சார்ந்த இனங்களுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும். பொது வழங்கல் போன்ற கடன் சாரா பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாது. எனவே, நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு, தொடக்க கூட்டுறவு விற்பனை சங்கங்களை அமைத்திடலாம்.

**கூட்டுறவு சங்கங்களில் கூட்டுறவு**

தன் உதவிக்குழுக்களைக் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக்கலாம். ஒவ்வொரு தன் உதவிக் குழுவும் சிறிய கூட்டுறவு சங்கமாதலால், ஒவ்வொரு தொடக்க வேளாண் கூட்டுறவு

வங்கியும் பல தன் உதவிக்குழுக்களின் ஒன்றிணைந்த அமைப்பாக மாறும். இது அதிகாரங்களைப் பரவலாக்குவதுடன் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சட்டப்படியாக அதிகாரமும் அளித்திடும்.

**ஒற்றைச்சாளரக் கடன் முறை**

மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கிடலாம். இச்செயல் ஒரே நிறுவனத்தில், விவசாயிகள் தங்களது அனைத்து கடன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏதுவாகும். தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்–ஊரக வளர்ச்சி வங்கியினை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியுடன் இணைத்து, தொடக்கக் கூட்டுறவு வேளாண்– ஊரக வளர்ச்சி வங்கிகள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகளாகச் செயல்படலாம்.

**உறுப்பினர்களின் பங்கெடுப்பு**

உறுப்பினர்கள், சங்கங்களின் செயல்பாடுகளில் பங்கெடுக்காவிடில், நிருவாகக் குழு, அலுவலர்கள் அதிகார அத்துமீறல் செய்யவும், சங்கங்களின் நிருவாகத்தினைத் தவறாக மேலாண்மை செய்யவும் வாய்ப்பாக அமையும். சங்கங்களின் பயனை அடைய உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். உறுப்பினர்களின் நலனை உயர்த்துவதற்கு இக்குழு உறுப்பினர்களது குறை அறியும் குழு, கடன் குழு, கடன் வசூல், நிவாரண குழு, வளங்கள் மேலாண்மைக் குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை குழு முதலிய பல துணைக் குழுக்களை அமைத்திடப் பரிந்துரைத்துள்ளது.

## 3.1.3 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம்

### I. கூட்டுறவு

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வளர்ந்து வரும் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் கூட்டுறவுக் கடன் அமைப்புகள், வங்கி அமைப்புகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுத் துறைக்குப் புத்துயிரூட்டுவதற்கு, இத்துறையிலுள்ள சிக்கல்களுக்கும், தடைகளுக்கும் சரியான வழியில் தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது. இப்பின்னணியில், நோக்கங்கள், வழிமுறைகள், கருத்துருக்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### குறிக்கோள்கள்

- ஊரக அளவில் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துதல்
- வணிக வாய்ப்புகளைப் பன்முகப்படுத்துதல்
- நலிந்த பிரிவினர்க்கு கடன் வழங்குதலுக்கு முன்னுரிமையளித்தல்

## செயல்முறைகள்

பதினோராவது திட்டத்திற்கு கீழ்க்காணும் செயல்திட்டங்கள் முன்மொழியப்படுகின்றன.

- கூட்டுறவு நிறுவனங்கள், தங்கள் பணிகளைத் திறமையாகவும், செம்மையாகவும் செய்திடும் பொருட்டு வலுப்படுத்தப்படும்.
- வைத்தியநாதன் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முதன்மையான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்.
- மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள், நீண்ட காலக் கடன்களை வழங்கும். இது வங்கிகளின் பணியினைப் பன்முகப்படுத்துவதுடன், விவசாயிகள், குறுகிய கால, நடுத்தர கால, நீண்ட காலக் கடன்களை ஒற்றைச் சாளர முறையின் வழி பெறுவதற்கு வழிவகுக்கும்.
- வேளாண் சார்ந்த துறைகளுக்கு வழங்கும் கடன்கள் இரு மடங்காகும். அனைத்து கூட்டுறவு கடன் சங்கங்களும், துடிப்பான, எந்த சூழ்நிலையிலும் வளரக்கூடிய, உறுதி மிக்க நிறுவனங்களாக அமைய வழிவகை செய்யப்படும்.
- நலிந்த பிரிவினருக்கு 67 விழுக்காடு அளவில் கடன் வழங்கப்படும். இத்திட்டக் காலத்தில் ஆதி திராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு அளிக்கப்படும் வேளாண் கடன் உதவி 30 விழுக்காடாக உயர்த்தப்படும்.

## திட்டங்கள்

### *கூட்டுறவுக் கடன்*

### *விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன் தள்ளுபடி (கூட்டுறவு நிறுவனங்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி)*

இயற்கைச் சீற்றங்களால் தொடர்ந்து பயிர்கள் சேதமடைந்த காரணத்தால், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையைக் கருத்தில் கொண்டு, 31.3.2006 அன்று வரை, கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் இருந்த கடன்களும் அவற்றுக்கான வட்டி முழுவதும் அரசு தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது. அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கி சேவை செய்வதற்காக தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை 5 ஆண்டு தவணைகளில் 8 விழுக்காடு வட்டியுடன் கூட்டுறவுகளுக்கு திருப்பிச் செலுத்த அரசு முடிவு செய்தது. மேலும், நபார்டு வங்கிக்கு தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவை செலுத்த வேண்டிய கடன் தொகையையும் அரசே திருப்பிச் செலுத்துவதற்கு பொறுப்பேற்றுக் கொண்டது. 31.3.2007 வரை தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்காக அரசு, கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.1,044.63 கோடி விடுவித்தது. மேலும், நபார்டு வங்கிக்கு திருப்பிச்

செலுத்த வேண்டிய தொகைக்காக ரூ.613.59 கோடியையும் விடுவித்தது. இத்திட்டத்திற்காக ரூ.1,110 கோடி ஒதுக்கீடு செய்திட முன்மொழியப்பட்டுள்ளது.

### *கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளில் செய்யப்படும் முதலீடும், ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டமும்*

கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் விளிம்புத் தொகை வழங்குவதிலும் உரிய கவனம் செலுத்தி அவற்றின் அடிப்படை மூலதனத்தைப் பெருக்கி, வணிகத்தை விரிவாக்குவதற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டமானது ஒரு முழுமையான அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து கடன் நிதியுதவிகளைப் பெற்று, மாநில அரசு கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. இந்நிதி, வேளாண் துறைக்கும் அதனைச் சார்ந்த துறைகளுக்கும் மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகள் வழியாக வழங்கப்படுகிறது. இத்திட்டம், சேலம், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீட்டினைத் தவிர, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் உதவிக்காக ரூ.1 கோடி ஒதுக்கிட முன்மொழியப்பட்டுள்ளது.

### *கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன்*

நகர்ப்புற, ஊரகப் பகுதிகளைச் சார்ந்த நலிந்த பிரிவினர், மகளிர், ஊனமுற்றோர் முதலானோர் கூட்டுறவு நிறுவனங்களால் அளிக்கப்படும் கடனை உயர்த்திப் பெறுவதற்குத் தேவையான தங்கள் பங்கு மூலதனத் தொகையினை செலுத்துவதற்குக் கூட இயலாத நிலையிலுள்ளனர். பெறப்படும் கடன் தொகையின் அளவு, கடன் பெறும் உறுப்பினர்களின் பங்கு மூலதன தொகையுடன் தொடர்புடையதால், கூட்டுறவு நிறுவனங்களில் மகளிர்/ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு உதவிகள் அளித்திட முன்மொழியப்பட்டுள்ளது. அரசினால் வழங்கப்படும் வட்டியில்லா இக்கடன் 5 ஆண்டு தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். இத்திட்ட காலத்தில், இத்திட்டத்திற்கென ரூ.2.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்/பழங்குடி இனத்தினைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படும். இதற்கென "ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்" வழி ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்திட முன்மொழியப்பட்டுள்ளது.

### *புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவி அளித்தல்*

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களின் கூட்டுறவு அமைப்புகளுக்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

*பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குதல்: பழங்குடியினர் துணைத் திட்டம்*

தமிழ்நாட்டில் 19 பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் பழங்குடியினர் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், பங்கு மூலதன மானியம், ஊர்ப்புறங்களில் நியாய விலைக் கடைகள் கட்டுவதற்குக் கடனும் மானியமும், நிருவாக மானியம், வாகன மானியம் வட்டி மானியம் ஆகிய உதவிகள் பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ.4.95 கோடி ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது.

**நுகர்வோர் கூட்டுறவு**

*புதிய சில்லறை பொருட்கள் விற்பனை மையம் அமைத்திட நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுக்கு உதவுதல்*

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றை உயர் அமைப்புடன் இணைத்திடும் கருத்துரு உள்ளது. கூட்டுறவு விற்பனை சங்கங்கள் சந்தை தொடர்பானத் திட்டங்களை மேற்கொள்ளவும், உணவு தானியங்கள், பிற விவசாய விளைப்பொருட்களை நன்கு சேமித்திடவும் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிட வேண்டியுள்ளது. விற்பனை சங்கங்களில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, பதினோராவது திட்டக் காலத்தில் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்திட முன்மொழியப்பட்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவினைப் பொறுத்த அளவில், உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணி வலியுறுத்தப்படமாட்டாது. ஆனால், வணிகத்தை உயர்த்திட மேலாண்மைத் திறமையினை மேம்படுத்துதல், நிதி சீரமைப்பு முதலானவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். பிற நிதி ஆதாரங்கள் வழியாக திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

புதிய சில்லறை பொருட்கள் மையங்கள் அமைத்திட ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்திடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

*கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளைக் கணினிமயமாக்குதல்*

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை கணினிமயமாக்கிட ரூ.0.20 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இப்பணி மொத்த விற்பனை பண்டகசாலைகளின் விற்பனையினைப் பெருக்கவும் விரைவான முடிவுகளை மேற்கொள்ளவும் வகை செய்யும்.

**II. வேளாண் நிதி நிறுவனங்களில் முதலீடு**

*தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கிகளில் சாதாரண/வணிகச் சிறப்பு செயல்பாட்டிற்கு முதலீடு*

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கியானது, சாதாரண கடன் ஈட்டுப் பத்திரங்களையும், சிறப்புக் கடன் ஈட்டுப் பத்திரங்களையும் வெளியிட்டு, நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டுகிறது. சாதாரண கடனீட்டுப்

பத்திரங்களில் மாநில அரசுகள், நடுவண் அரசு, ஆயுள் காப்பீட்டு கழகம், பாரத ஸ்டேட் வங்கி, அதன் குழும வங்கிகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, பிற மாநிலங்களின் வேளாண்மை, கூட்டுறவு வங்கிகள் ஆகியன முதலீடு செய்கின்றன. சாதாரணத் திட்டங்களின்கீழ் மாட்டுக் கொட்டகை, பண்ணை வீடுகள், நிலத்திற்கு வேலியமைத்தல், நிலுவைக் கடன்களை அடைத்தல், நிலம் வாங்குதல் போன்ற இனங்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது. இதனுடன் அவ்வப்போது சிறு பாசனத்திற்கும் கடன் அளிக்கிறது. சாதாரண பரிவர்த்தனைகளுக்கு மொத்தக் கடனீட்டுப் பத்திரங்களில் 10 விழுக்காடு மாநில அரசு முதலீடு செய்கிறது. சாதாரண கடன் வழங்கும் திட்டங்களில் உள்ள நிதியாதாரத்தின் பங்கினைக் கணக்கில் கொண்டு, ஆண்டுதோறும் நபார்டு வங்கியால் குறிப்பிடப்படும் உரியத் தொகையை மாநில அரசுகளும், நடுவண் அரசும் செலுத்துகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பதினோராவது திட்ட ஒதுக்கீடு

கூட்டுறவுத் துறையில் திட்ட வாரியாக அளிக்கப்படவுள்ள ஒதுக்கீடுகளும், வேளாண் நிதி நிறுவனங்களின் மேற்கொள்ளப்பட உள்ள முதலீடுகளும் அட்டவணை 3.1.6இல் கொடுக்கப்பட்டுள்ளன.

#### அட்டவணை 3.1. 6

**பதினோராவது திட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடு**

(ரூ. கோடியில்)

| வ.எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| அ) | **தொடரும் திட்டங்கள்** | |
| 1. | கூட்டுறவுக் கடன் நிறுவனங்களில் முதலீடு – ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டம் | 15.00 |
| 2. | கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் கடனளித்தல் | 4.60 |
| 3. | கூட்டுறவு நிறுவனங்களுக்கு பங்கு மூலதனம் வாயிலாக நிதி உதவி அளித்தல் | 1110.00 |
| 4. | பழங்குடியினர் பகுதிகளிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி உதவி | 4.95 |
| 5. | ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்களின் ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குதல் | 1.00 |
| | **தொடரும் திட்டங்கள் – மொத்தம்** | **1135.55** |
| ஆ) | **புதிய திட்டங்கள்** | |
| 1. | கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடனளித்தல் – ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டம் | 1.00 |
| 2. | புதிய சில்லறை வணிக விற்பனை மையங்கள் அமைப்பதற்கு நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகளுக்கு நிதி உதவி அளித்தல் | 1.00 |
| 3. | மொத்த விற்பனை கூட்டுறவு விற்பனை நிலையங்களை கணினி மயப்படுத்தல் | 0.20 |
| 4. | புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கல் | 1.25 |
| | **புதிய திட்டங்கள் – மொத்தம்** | **3.45** |
| | **பெரு மொத்தம்** | **1139.00** |
| | **வேளாண் நிதி நிறுவனங்களின் முதலீடு** | |
| | தொடரும் திட்டங்கள் | |
| | தமிழ்நாடு கூட்டுறவு வேளாண் வங்கிகள் கடன் பத்திரங்களை வெளியிடுதல் | 5.00 |
| | **வேளாண் நிதி நிறுவனங்கள் – மொத்தம்** | **5.00** |

**பதினோராவது திட்டத்தில் கண்காணிக்கத்தக்க இலக்குகள்**

பதினோராவது திட்டத்தில் கூட்டுறவு துறைக்கான இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**குறுகிய காலக் கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசின் உதவி –** இத்திட்டக் காலத்தில் தமிழக அரசிடமிருந்து குறுகிய காலக் கடன் வழங்கும் கூட்டுறவு கடன் நிறுவனங்களுக்குத் தலைமை கூட்டுறவு வங்கியினால் ரூ.1,186.35 கோடியும், மாவட்ட மைய கூட்டுறவு வங்கியினால் ரூ.2,447.6 கோடியும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியினால் ரூ.932.84 கோடியும் வழங்கப்படும். மொத்தம் ரூ.4,566.79 கோடி மாநில அரசினால் உதவி வழங்கப்படும்.

**வேளாண் துறைக்குக் கடன் –** பயிர்க்கடன் ரூ.8,330 கோடியும், வேளாண் சார்ந்த பணிகளுக்கு ரூ.1,000 கோடியும், நீண்ட காலக் கடன் அளிப்பதற்காக ரூ.1,000 கோடியும் மொத்தமாக ரூ.10,330 கோடி பதினோராவது திட்டகாலத்தில் வேளாண் துறைக்குக் கடனாக வழங்கப்படும்.

**வேளாண் சாராக் கடன் –** நகைக்கடன், வீடு கட்டுவதற்கான கடன், தொழில் கடன், தன் உதவிக்குழுக்களுக்கான கடன் உள்ளிட்ட வேளாண் சாரா கடன், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.8,790 கோடியும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.19,520 கோடியும், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.11,000 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தமாக ரூ.39,310 கோடி கடன் வழங்கப்படும்.

**வீடுகட்ட கடன்–** மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.400 கோடி, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.400 கோடி, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.630 கோடி என மொத்தமாக ரூ.1,430 கோடி அளவில் வீடுகட்டும் கடன்கள் வழங்கப்படும்.

**தொழிற்கடன் –** தொழில் தொடங்க, மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.225 கோடியும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.200 கோடியும், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் வழியாக ரூ.505 கோடியும் ஆக மொத்தம் ரூ.930 கோடி அளவில் கடன் வழங்கப்படும்.

**வேளாண் சாராக் கடன் –** வேளாண் சாரா, பிற சேவைக் கடன் வழங்குவதற்காக மாவட்ட மைய கூட்டுறவு வங்கி வாயிலாக ரூ.900 கோடியும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக ரூ.900 கோடியும், நகர்ப்புறக் கூட்டுறவு வங்கி வாயிலாக ரூ.850 கோடியும், மொத்தமாக ரூ.2,650 கோடி முன்மொழியப்பட்டுள்ளது.